**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம். கமுதி**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., B.Sc., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கமுதி**
**2026 ஆம் வருடம் மே மாதம் 26 ம் நாள் செவ்வாய்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 69/2023**
**CNR. NO.TNRM070019932023**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | பேரையூர் காவல்நிலையம் குற்ற எண் – 44/2022 |
| | 1ம் எதிரியின் விபரம் | |
| 2. | பெயர் | ராமசாமி |
| 3. | த/பெ. | சுருளிதேவர் |
| 4. | தொழில் | -- |
| 5. | முகவரி | உடையார்கூட்டம் |
| 6. | வயது | 55/22 |
| | 2ம் எதிரியின் விபரம் | |
| 2. | பெயர் | திவ்யா |
| 3. | க/பெ. | மகேந்திரன் |
| 4. | தொழில் | -- |
| 5. | முகவரி | உடையார்கூட்டம் |
| 6. | வயது | 26/22 |
| | | |
| 7. | சம்பவ நாள் | 12-05-2022 ம் தேதி 07.30 மணி |
| 8. | புகார் தேதி | 12-05-2022 ம் தேதி 21.30 மணி |
| 9. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | A1, A2 – 04-01-2023 (Station Bail) |



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:29:14 +0530

<table>
<tr><td>10.</td><td colspan="2">பிணையில் விடுவிக்கப்பட்ட நாள்</td><td>A1, A2 – 04-01-2023 (Station Bail)</td></tr>
<tr><td>11.</td><td colspan="2">கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்</td><td>17-04-2023</td></tr>
<tr><td>12.</td><td colspan="2">விசாரணை துவங்கப்பட்ட நாள்</td><td>25-05-2026</td></tr>
<tr><td>13.</td><td colspan="2">விசாரணை முடிவுற்ற நாள்</td><td>25-05-2026</td></tr>
<tr><td rowspan="2">14.</td><td colspan="2">சாட்டப்பட்ட குற்றச்சாட்டு</td><td>1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(1) and 4 of TNPHW Act ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b) ன் கீழ்</td></tr>
<tr><td colspan="2">வனையப்பட்ட குற்றச்சாட்டு</td><td>1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(1) and 4 of TNPHW Act ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b) ன் கீழ்</td></tr>
<tr><td>15.</td><td colspan="2">காலதாமதத்திற்கான காரணம்</td><td>சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை</td></tr>
<tr><td>16.</td><td colspan="2">அரசு தரப்பு சாட்சிகள்</td><td><table>
<tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>25.05.2026</td><td>25.05.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>25.05.2026</td><td>25.05.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>25.05.2026</td><td>25.05.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>25.05.2026</td><td>25.05.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>17.</td><td colspan="2">எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>26-05-2026</td></tr>
<tr><td>18.</td><td colspan="2">எதிரிகள் தரப்பு சாட்சிகள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>19.</td><td colspan="2">எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள்</td><td>U/s. 320 Cr.P.C Petition filed and dismissed in M.P. No. 05/2026, dated: 25.05.2026</td></tr>
<tr><td>20.</td><td colspan="2">எதிரிகள்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 311</td><td>U/s. 311 Cr.P.C Petition filed and allowed in M.P. No. 03/2026, dated: 25.05.2026</td></tr>
</table>



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:29:23 +0530

| | | |
|---|---|---|
| | Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | |
| 21. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள் | U/s.70(2) Cr.P.C Petition filed and allowed in Cr.M.P.No.6884/2023, dt. 22.09.2023 |
| 22. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி |
| 23. | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | திரு. A. முத்திருளப்பன் |
| 24. | எதிரிகளின் கூற்று | எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |
| 25. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 26-05-2026 |
| 26. | வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 26-05-2026 |
| 27. | நீதிபதியின் முடிவு | முடிவாக, 1ம் எதிரி இதச பிரிவுகள் 294(பி), 506(1) and 4 of TNPHW Act ன் கீழும், 2ம் எதிரி இதச பிரிவுகள் 294(b) ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரிகள் குவிமுச பிரிவு 248 (1) ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார்கள். எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.<br>இவ்வழக்கில் தடயசொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடயசொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. |

இந்த வழக்கு 17-04-2023ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 26-05-2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-1 திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திரு. A. முத்திருளப்பன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை உரிய கவனத்துடன் கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும் இன்று **(26-05-2026)** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

**தீர்ப்புரை**

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் இருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கு : -**

1. புகார்தாரராகிய அழகுலட்சுமியின் கணவர் மணிகண்டன் என்பவரும் 2 வது எதிரியும் கடந்த 8 மாதங்களாக செல்போனில் பேசி பழகி வந்த விபரத்தை தெரிந்து கொண்ட புகார்தாரரும், அவரது அம்மா முத்துபாக்கியம் என்பவரும் கடந்த 11.05.2022 ம் தேதி காலை சுமார் 07.30 மணியளவில் 2 வது எதிரியின் வீட்டிற்கு சென்று 2 வது எதிரியிடம் ஏன் எனது கணவரிடம் போனில் பேசுகிறாய் இனிமேல் பேசாதே என்று சத்தம் போட்டதற்கு 2 வது எதிரி அப்படிதாண்டி முண்ட பேசுவேன் என்று அசிங்கமாக திட்டியும், பின்பு காலை சுமார் 08.00 மணியளவில் 2 வது எதிரி பூச்சி மருந்தை குடித்து விட்டதாக கேள்விப்பட்டு 1 வது எதிரி புகார்தாரர் அழகுலெட்சுமியின் வீட்டிற்கு சென்று 2 வது எதிரி மருந்தை குடித்ததற்கு நீ தாண்டி முண்ட காரணம் என்று புகார்தாரரை பெண் என்று தெரிந்திருந்தும் அசிங்கமாகப் பேசி, உன்னையும் உனது கணவர் மணிகண்டனையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 1 ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(1) and 4 of TNPHW Act ன் கீழும், 2 ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b) ன் கீழ் பேரையூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் பிணையில் சென்றுள்ளதால் அவர்களுக்கு அழைப்பாணைகள் அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவர்களுக்கு குவிமுச பிரிவு 207 ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:29:33 +0530

3. போதிய கால அவகாசத்திற்கு பின் 07-06-2023ம் தேதியன்று எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச. பிரிவு. 240(1) ன் படி 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(1) and 4 of TNPHW Act ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b) ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து அது குறித்து கு.வி.மு.ச. பிரிவு. 240(2) ன் படி எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டுள்ளது. அதற்கு எதிரிகள் தாங்கள் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச. பிரிவு. 242-ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் அ.சா.1 மற்றும் எதிரிகள் சமாதானமாக சென்று விட்டதாக பிரிவு 320 (2) குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சமரசம் செய்துகொள்ள முடியாத குற்றம் என்பதால் எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சமரச மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.4** சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப் பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்**

i. அரசுத் தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் பிறழ்சாட்சிகளாகி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

ii. அசா.4 பேரையூர் காவல்நிலைய தலைமைக் காவலர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் வழக்கின் புலன்விசாரணை அதிகாரிகளான சார்பு ஆய்வாளர்



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:29:38 +0530

திரு.சிவசாமி மற்றும் திரு. முனியசாமி ஆகியோர்களது கையொப்பம் நன்கு பரிட்சயம் என்றும், ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாக கூறி சார்பு ஆய்வாளர் திரு. சிவசாமி அவர்கள் கடந்த 12.05.2021ம் தேதியன்று 13.00 மணிக்கு மதுரை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று நிலையக் குற்ற எண்.44/2022 இதச பிரிவுகள் 294(b), 506(1) and 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், அன்றே சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தும், சம்பவ சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், சார்பு ஆய்வாளர் திரு. முனியசாமி அவர்கள் 04.01.2023ம் தேதி 13.30 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து தக்க இருநபர் பிணையில் விடுவித்துள்ளார் என்றும், சார்பு ஆய்வாளர் திரு. சிவசாமி அவர்கள் அத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

iii. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து குவிமுச.313(1)(ஆ) பிரிவின் படி கேள்விகள் கேட்க எதிரிகள் சாட்சியங்களை பொய் என்றும், தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் பேரில் எதிரிகள் தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. <u>தீர்வுக்குரிய பிரச்சனை :–</u>

i. 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(1) and 4 of TNPHW Act ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b) ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபித்துள்ளதா?

ii. அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிகளுக்கு கிடைக்கக்கூடிய தண்டனை விவரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

iii. இரு தரப்பும் வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள்



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:29:45 +0530

பரிசீலிக்கப்பட்டது.

**7. அரசு தரப்பு வழக்கினை எதிரிகளுக்கு எதிராக நிரூபித்துள்ளதா? என்பதை முடிவு செய்ய அரசு தரப்பு சாட்சியங்களை ஆராயும் போது:–**

i. அசா.1 வழக்கின் நிகர்நிலை புகார்தாரர் ஆவார். அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகளால் தங்களுக்கு காயம் ஏற்படவில்லை என்றும், கூட்டத்திற்குள் சென்று கீழே விழுந்ததில் தங்களுக்கு காயம்பட்டதாகவும், தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு கமுதி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று மதுரை அரசு மருத்துவமனையில் மேல்சிகிச்சை பெற்றதாகவும், தனது கணவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும், தான் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் இருந்த போது போலீசார் தன்னிடம் ஒரு வெள்ளை பேப்பரில் கையொப்பம் (அ.சா.ஆ.1) பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1ன் சாட்சியம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

ii. சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியாக சேர்க்கப்பட்ட அ.சா.2 தனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும், சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் வீட்டில் இருந்த போது போலீசார் வந்து ஒரு வெள்ளைத்தாளில் கையொப்பம் (அ.சா.ஆ.2) பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். இவர் கேள்விநிலை சாட்சியம் என்பதால் இவரது சாட்சியம் ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

iii. இவ்வழக்கில் அ.சா.4 ஆக விசாரணை செய்யப்பட்ட தலைமைக் காவலர் அவர்கள் தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு. சிவசாமி அவர்கள் கடந்த 12.05.2021ம் தேதியன்று 13.00 மணிக்கு மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா.1 அளித்த புகார் வாக்குமூலத்தைப் **(அ.சா.ஆ.4)** பெற்று நிலையக் குற்ற எண்.44/2022 இதச பிரிவுகள் 294(b), 506(1) மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றே 17.15 மணிக்கு சாட்சிகள்



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:29:52 +0530

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் **(அ.சா.ஆ.6)** மற்றும் மாதிரி வரைபடம் **(அ.சா.ஆ.7)** தயார் செய்தும், சாட்சிகள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாக கூறியுள்ளார். ஆனால் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில் சுமார் 4,5 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் தான் வீட்டிலிருந்த போது போலீசார் வந்து எதோ விசாரணை என்று கூறி கையொப்பம் பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.4 கூறியபடி சம்பவ இடத்தில் வைத்து ஆவணங்கள் தயார் செய்யப்பட்டதா என்பது குறித்து அரசுத் தரப்பில் நம்பும்படியான சாட்சியம் அளிக்கப்படவில்லை.

iv. மேலும் அ.சா.4 ன் சாட்சியத்தின் படி சாட்சிகள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், சம்பவ இட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், 04.01.2023 ம் தேதி 13.30 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து தக்க பிணையில் விடுவித்தும், அத்துடன் புலன்விசாரணை முடித்து இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அ.சா.4 ன் சாட்சியத்தால் எவ்வித பலனும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி சாட்சியங்களின் ஆய்விலிருந்து 1 ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(1) and 4 of TNPHW Act ன் கீழும், 2 ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வுக்குரிய பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் பதில் அளிக்கிறது.

v. இறுதியாக, இந்நீதிமன்றம், 1 ம் எதிரி இதச பிரிவுகள் 294(பி), 506(1) and 4 of TNPHW Act ன் கீழும், 2 ம் எதிரி இதச பிரிவுகள் 294(b) ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரிகள் குற்றவாளி



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:29:57 +0530

இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார்கள். எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

vi. இவ்வழக்கில் தடய சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடய சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2026ம் ஆண்டு மே திங்கள் 26ம் நாள் செவ்வாய்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:30:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. அழகுலெட்சுமி |
| அ.சா.2 | திருமதி. முத்துபாக்கியம் |
| அ.சா.3 | திரு. முனியசாமி |
| அ.சா.4 | திரு. கோபாலகிருஷ்ணன் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 12.05.2022 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை மட்டும் |
| அ.சா.ஆ.2 | 12.05.2022 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சிக் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 13.05.2022 | பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 12.05.2022 | புகார் வாக்குமூலம் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.5 | 12.05.2022 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 13.05.2022 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.7 | 13.05.2022 | மாதிரி வரைபடம் |

**அரசு தரப்பு சான்றுபொருள்:–** இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:–**இல்லை

**குறிப்பு :–**

1. எதிரி வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தார்.

2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.

3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:30:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.